[1972 ஆகஸ்ட் 25

பாலக் கோம்பையில் புதிய கண்மாய்.

* 348 வினா.—திரு நா. வெ. குருசாமி: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம் ஆண்டிப்பட்டி ஒன்றியத்தைச் சேர்ந்த பாலக் கோம்பையில் ஓர் கண்மாய் அமைக்கப்படவிருக்கிறதா ?

(இ) ஆம் எனில், எப்பொழுது வேலை ஆரம்பிக்கப்படும் ?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) & (இ) இத்திட்டம் பரிசீலிக்கப்பட்டு சிக்கனமற்றது என்று ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

திரு நா. வெ. குருசாமி : தலைவரவர்களே, கடந்த 3 மாதங்களுக்கு முன்பாக மதுரை சூப்பிரண்டெண்டிங் இன்ஜினியரும் மற்றும் பல அதிகாரிகளும் வந்து பார்த்து, அந்தத் திட்டத்தை மேற்கொள்ளலாம் என்று என்னிடமே கூறிச் சென்றிருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் பதில் கூறும்போது இத்திட்டம் சரியில்லை என்று கூறுகிறார்கள். இந்தத் திட்டத்தை நிறைவேற்றினால் அங்கே உள்ள மக்களுக்கு மிகவும் வசதியாக இருக்கும். ஆகவே, அந்தத் திட்டத்தை இனிமேலாவது மேற்கொள்வதற்கு அரசாங்கம் ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, ஏற்கனவே அந்தத் திட்டம் பரிசீலிக்கப்பட்டு, $7\frac{1}{2}$ லட்சத்திற்கு மதிப்பீடு செய்யப்பட்டது. அந்தத் திட்டம் சிக்கனம் அற்றது என்று கைவிடப்பட்டது. மறுபடியும் அந்த வட்டார மக்களிடமிருந்து வேண்டுகோள்கள் வந்ததால், அதையேற்று அரசாங்கம் தலைமைப் பொறியாளரை மறு பரிசீலனை செய்யச் சொல்லி ஆணையிட்டிருக்கிறது. மறுபரிசீலனையில் அது சிக்கனம் என்று அரசுக்கு அறிக்கை வருமானால், நிச்சயம் பரிசீலிக்கப்படும்.

தமிழ்நாட்டில் வீட்டு வசதித் திட்டங்கள்.

* 349 வினா.—திரு என். கிட்டப்பா: மாண்புமிகு பின் தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் வீட்டு வசதி திட்டங்களை அமுல் படுத்த வருடாந்திர மானியமாக ரூ. 10 கோடி அளிக்கக் கோரி நமது அரசு மத்திய அரசினை வலியுறுத்தியுள்ளதா ?

மாண்புமிகு திரு க. இராசாராம் : ஆம்.

திரு என். கிட்டப்பா : தலைவரவர்களே, அந்தத் திட்டத்திற்கு இது வரை எவ்வளவு தொகை அளிக்கப்பட்டிருக்கிறது என்பதையும், அது எப்போது நிறைவேற்றப்படவிருக்கிறது என்பதையும் அமைச்சர் அவர்கள் திட்டவட்டமாக அறிவிப்பார்களா ?

1972 ஆகஸ்ட் 25]

மாண்புமிகு திரு க. இராசாராம் : நம்முடைய அரசு 10 கோடி ரூபாய்க்கும் மேலாக பல திட்டங்களை மத்திய அரசுக்கு சமர்ப்பித்தது. அதற்கு தற்போது நிதி ஒதுக்க வசதியில்லை என்று கூறி, மத்திய அரசிடமிருந்து நம்முடைய கோரிக்கையை நிராகரித்து பதில் வந்திருக்கிறது.

திரு க. சுப்பு : தலைவரவர்களே, இராயப்பேட்டை காலனியில் குடியிருக்கும் நிருபர்கள் ஜூலை மாத வாடகைப்பணம் செலுத்தியிருந்தும், அவர்களை வீட்டை காலி செய்யுங்கள் என்று நோட்டீஸ் அனுப்பப்பட்டதா ? அதன் மீது அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு க. இராசாராம் : அது பற்றிய குறிப்புகள் தற்போது என்னிடத்தில் இல்லை. தனிக்கேள்வி போட்டால் பதில் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மூலக் கேள்விக்கும் இந்தத் துணைக் கேள்விக்கும் சம்பந்தம் இல்லை. உறுப்பினர்கள் துணைக் கேள்விகள் கேட்கிறபோது அது மூலக் கேள்வியை ஒட்டியதாக இருக்கவேண்டும்.

திரு கே. டி. கே. தங்கமணி : மத்திய அரசிடமிருந்து நிதி நமக்கு கிடைக்கிற வரையில், ஏற்கெனவே, காலனியில் இருக்கக்கூடியவர்களை வெளியேற்ருவண்ணம் பாதுகாப்பு கொடுக்கப்படுமா? அல்லது நோட்டீஸ் கொடுத்து வெளியேற்றப்படுவார்களா ?

மாண்புமிகு திரு க. இராசாராம் : அதற்காக தக்க பாதுகாப்புகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

* 350. *Q*.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Backward Classes be pleased to state—

(*a*) whether the Government order that Co-operative Housing loans could be granted for the construction of flats only has been cancelled ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு க. இராசாராம் : (அ) ஆம்.

(இ) சென்னை, கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி முதலிய நகரங்களில் கூட்டுறவு திட்டத்தின் கீழ் கொடுக்கப்படும் கடன்கள் பல அடுக்கு மாடி வீடுகள் கட்டுவதற்கே வழங்கப்பட வேண்டும் என ஒரு ஆணை 1966-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்களில் பிறப்பிக்கப்பட்டது. இத்தடையின் காரணமாக நிலம் வைத்திருப்பவர்கள் பல அடுக்கு மாடி வீடுகள் கட்ட விரும்பவில்லை என்றும், வீடு கட்ட கூட்டுறவு சங்கத்திடமிருந்து கடன் வாங்க நினைத்த பலர்